★ விலை ரூபா 1 - 25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 கார்த்திகை 14 வைபர் 24 இதழ் 289

யாழ்ப்பாணம் புதன்கிழமை 30-11-83

## "தமிழ் ஊழியர் இடமாற்றம் பிரிவினைக்கே வழிவகுக்கும்!

### வேறுவழியே இல்லையா" என்கிறார் சரத்

(கொழும்பு)

"தமிழ் ஊழியர்களை விரும்பிய இடங்களுக்கு மாற்றுவதாலும் ஒய்வுபெற அனுமதிப்பதாலும் பிரிவினைக்கே வழிவகுக்கப்படுகிறது. இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேறுவழியே இல்லையா?" என்று கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையில் இவ்வாறு கேட்ட திரு. முத்தெட்டுவேகம தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"கொள்ளை, வன்செயலில் ஈடுபட்டவர்களை விடுதலை செய்துவிட்டு பாதிக்கப்பட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

# இந்திரா - ஜே. ஆர். இன்று காலை இறுதிக் கட்டப் பேச்சுக்கள்!

## ஜனாதிபதி 3-ல் தாயகம் திரும்புகிறார்!

(புதுடில்லி)

**இலங்கைத் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காணப்படும் என்று நம்பப்படும் சமரசப் பேச்சுவார்த்தைகளின் இறுதிக்கட்டமாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று காலை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.**

இரண்டாவது தடவையாக இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஏற்கனவே திட்டமிட்டிருந்தவாறு நாளை 1ம் திகதி நாடு திரும்ப மாட்டார். எதிர்வரும் சனிக்கிழமையே அவர் தாயகம் திரும்புகிறார்.

இந்தியப் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இன்று காலை நடைபெறவுள்ள இறுதிக்கட்டப் பேச்சுக்களின் போது சிறப்புத் தூதுவர் திரு ஜி பார்த்தசாரதி, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. வாஜ்பாய் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

இரு தலைவர்களுக்கும் மற்றும் கூட்டணித் தலைவர்களுக்கும் திருமதி காந்திக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களில் ஒருசில விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களில் இணக்கம் காணப்பட் சாதகமானதொரு தீர்வு ஏற்டுள்ளதாகவும் இன்று நடக் படும் என்றும் அவதானிகள் கும் இறுதி பேச்சுக்கள் மூலம் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## பொலிஸ் காவலில் வைக்கப்பட்ட கணவனை ஆஜர்செய்யக் கோரினார்:

### விடுதலையாகிவிட்டதாக நீதிமன்றத்தில் தகவல்

(மாவிட்டபுரம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒரு மாதகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட மனு மீதான விசாரணையில் அவ் இளைஞர் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஊரெழுவைச் சேர்ந்த இராசையா உதயனன் என்பவரின் மனைவி வசந்தமலர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் தாக்கல் செய்த மனுவில், பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த தமது கணவன் சட்டவிரோதமான முறையில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் என்றும் கோரியிருந்தார்.

இம்மனு மல்லாகம் நீதிபதி திரு. சி. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி சார்பில் ஆஜரான சார்ஜண்ட் சிவலிங்கம் மேற்படி நபர் விசாரணை செய்யப்

8-ம் பக்கம் பார்க்க)

## "டாக்டர்கள் திரும்பாததால் ஆஸ்பத்திரிகள் சீர்குலைவு!"

### பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

"ஜூலைக் கலவரங்களின்பின்னர் சொந்த இடங்களுக்கு சென்ற டாக்டர்களில் 100 பேரும் 125 உதவி மருத்துவர்களும் வேலைக்குத் திரும்பாததால் வைத்திய நிலையங்கள் சீர்குலைந்துள்ளன" என்று சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து கவலை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதம் நேற்று நடைபெற்றது. விவாதத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த சுகா

(8-ம் பக்கம் பார்க்க)

## "தமிழ் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கவில்லை!"

### பாலஸ்தீன விடுதலை இயக்க பிரதிநிதி மறுப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் பயிற்சியளிக்கவில்லை என்று இயக்கத்தின் இலங்கைப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் இயக்கத்தின் தலைவர் திரு யசீர் அரபாத் அடுத்த ஆண்டில் இலங்கை வருவார் என்றும் தெரிவித்தார். (கு)

## புதுடில்லி மாநாடு முடிந்தது

(புதுடில்லி)

காமன்வெல்த் தலைவர்கள் புதுடில்லி மாநாடு நேற்று முடிவடைந்தது

மாநாட்டின் இறுதியில் நீண்ட அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. காமன்வெல்த் செயலாளர் திரு. சிறிதத் ரம்பால் இப்பதவிக்கு மேலும் 5 ஆண்டுகள் பதவியிலிருக்க தெரிவு செய்யப்பட்டார். (கு)

## இருளில் பாராளுமன்றம்

(இ. கந்தசாமி)

பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடுமீதான குழு நிலைவிவாதம் நேற்று நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 25 தடவைகள் மின்சாரம் தடைப்பட்டு சபை இருளில் மூழ்கியது.

சபைக்கு வெளியே மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்துகொண்டிருந்தது.

எதிர்க்கட்சித்தலைவர் திரு அநுரா பண்டாரநாயக்கா

(8-ம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ்சேவைத் திணைக்களம்

(கொழும்பு)

அடுத்த மாதம் 15-ம் திகதி முதல் தனியார் பஸ்சேவை திணைக்களம் ஏற்படுத்தப்படவுள்ளது. தனியார் பஸ் சேவை சீராக இயங்குகின்றதா என்பதை இத்திணைக்களம் கண்காணிக்கும். (வெ)

## "மருத்துவக்கல்லூரிகளில் இன விகிதாசார அடிப்படையில் அனுமதி வழங்குக!"

### பொல்காவலை எம். பி. கூறுகிறார்

(கொழும்பு)

"ஜூலைக் கலவரம் போன்ற சம்பவங்களால் மருத்துவ நிலையங்கள் பாதிக்காதிருப்பதற்கு வசதியாக இனவிகிதாசார அடிப்படையில் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைச்சேர்க்க வேண்டும்."

இவ்வாறு பொல்காவல எம். பி. திரு. சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

"புதிய குடியேற்றத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது இனவிகிதாசார அடிப்படையில் செய்யவிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதேபோல மருத்துவ, சட்டக் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் போதும் இனவிகிதாசார ரீதியில் அனுமதி வழங்க வேண்டும்" என்று ஜெயக்கொடி தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

மத்துகம எம். பி திரு. அனில் முனசிங்கா பேசுகையில் "டாக்டர் ஒருவர் இங்கிலாந்தில் மாதமொன்றில் 5 லட்சம் ரூபா சம்பாதிக்கக் கூடியதாயிருக்கும்போது இலங்கையில் 1500 ரூபா சம்பளத்தில் வேலை செய்வார் என்று எப்படி திர்பார்க்க முடியும்" என்றார். (இ-கு

## யாழ். திரும்பிய சிங்கள அகதிகளுக்கு இலவசஉணவு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து சென்று முகாம்களில் தங்கி இருந்துவிட்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்துள்ள சிங்கள மக்களுக்கு அரிசி, மா, சீனி போன்ற உணவுப் பொருள்களை வழங்கும்படி அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இரு மாதங்களுக்கு நான்கு தடவைகள் இந்த உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

அகதிகளாக இருந்த சிங்களவர்கள் தாங்கள் முகாமில் தங்கியிருந்ததற்கான அத்தாட்சிப் பத்திரத்தை இப்பொழுது இருக்கும் பகுதியிலுள்ள உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்து உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (மா-கு)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நாலாயிரம் தொடர்பிலக்கமுள்ள மொரிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. புதன்கிழமையிலிருந்து நல்லூர், செட்டித்தெரு, இல. 8 இல் பார்வையிடலாம். 10235

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு அருகாமையில் எல்லா வசதிகளும் அமைந்த வீடு ஒன்று 3 பரப்பு காணியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: P. அல்பிறற், ஊறாவில், காங்கேசன்துறை 10244

யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத் தெருவில் வீடமைப்புக்காணி 1½ இலாச்சம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: ''பிருஜ்மல் என்ரப்பிரைசஸ்'', 93, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 10223

நல்ல நிலையில் உள்ள றெமிங்ரன் ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. சண்முகநாதன், விலைமதிப்புத் திணைக்களம், தேசிய வீடமைப்புக் கட்டிடம், யாழ்ப்பாணம். 10237

உடுவில்-கோவிற்பற்று சங்குவேலி இறையில் கொல்லன்வயலும் வேலக்கைவயலும் என்ற 7½ பரப்பும், உடுவில் இறை மழுவராயர் தோட்டம் 2 பரப்பு (காசிநாதர் சிதம்பரநாதர் சேச் லேன் அருகாமையில்) ஆழ்வார்முதலியார் தோப்பு அடங்காவளவு 4 பரப்பும், கொற்பிட்டி இறைதூம்பம் 5 பரப்பும், முதலிமாதன் பேரில் தோம்பு முருகமூர்த்தி கோவிலுக்கருகாமையிலுள்ளது. 2 பரப்பும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்புகொள்ளும் முகவரி: திரு. சி. துரைச்சாமி, மாவிட்டபுரம் கிழக்கு, தெல்லிப்பழை. 10180

நீம் சுகாதாரதூபம், நுளம்பு, கொசுகு, இலையான் இவற்றின் தொல்லைகளை நீக்க இயற்கை மூலிகைகளால், சுகாதார முறையில் தயாரிக்கப்பெற்றது. மில்க்வைற் தயாரிப்பு. 10185

கோப்பாய் தெற்கு V. C. Lane (பருத்தித்துறை வீதியின்று 4வது காணி) 3½பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சி. க. பிரகாசம், மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு கொக்குவில். 10218

## விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வைத்தியசாலைக்குச் சமீபமாக கந்தையா வீதியில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி முடியப்பாபிள்ளை கணேசபதி, கந்தையா வீதி, சாவகச்சேரி. 10215

## பயிற்சி

வெல்டிங்- (செய்முறை அறிமுறையுடன்) புதிய வகுப்புகள் ஆரம்பம் 2-12-83 யாழ் நகரில் மிகக் குறுகிய காலத்தில் அதிகளவு அறிமுறை பயிற்சியுடன் வகுப்புகள் நடைபெறும். யாழ்.நகரில் கல்விப் பகுதியினரின் அங்கீகாரத்தைப் பெற்ற ஒரேயொரு கல்லூரி. மிகப்பெறுமதிவாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். விபரத்துக்கு:- அதிபர், உயர் கலைக்கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 10226

## தேவை

சகலவசதிகளும்கூடிய வீடு தேவை. பஸ்நிலையம், சந்தைக்கும் வண்ணார்பண்ணைக்கும் அண்மையில் கன்னாதிட்டி றோட், கஸ்தூரியார் வீதி, மணிக்கூட்டுவீதி விரும்பத்தக்கது. 400—600 க்குள் வாடகையும், முற்பணமாக தகுந்த தொகையும் கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். 135, கன்னாதிட்டிறோட், யாழ்ப்பாணம். 10245

எமது ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர்கள் உடன் தேவை. இருபது வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. நேரில்வரவும். A. சுப்பையா அன் கோ, 4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 10249

பெண்களின் ஆடைகள் நாகரீகமாக வெட்டுவதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. சயன்ரிவிக், கட்டிங் விரும்பத்தக்கது. நேரில்:- அங்கலின் காமன்ஸ், 24/1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 10165

ஊதுபத்தி உருட்டுவதில் அனுபவமுள்ளவர்களும், பயிலுனர்களும் தேவை. நியாயமான வேதனம் வழங்கப்படும். T. N. K. ராஜா 14, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 10175

## குருக்கள் தேவை

அராலி ஐயனார் கோவிலுக்கு நற்குணம்- பொறுமையுடைய கோவில் சங்கத்திற்கு கட்டுப்பட்டு நடக்கக் கூடிய குருக்கள் தேவை. குடியிருப்பதற்கு வீடு வசதியுண்டு. மிகுதி விபரம் நேரில்.

5-12-83 காலை 10-00 மணிக்கு முன்னர் நேரில் வந்து சந்திக்கவும்.

காரியதரிசி - பரிபாலனசபை,
ஐயனார் கோவில்
அராலி கிழக்கு — வட்டுக்கோட்டை.

(10242)

## யாழ்ப்பாணம்

பஸ் நிலையத்திற்கு அருகாமையில்

6 கடைகள் ★ 6 கடைகள்

## குத்தகைக்குண்டு

தொடர்பு கொள்ளும் முகவரி:

''பிருஜ்மல் என்ரப்பிரைசஸ்''

93, 2-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்.

(10222)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்விப் பத்திர அறிவித்தல்

1984-ம் ஆண்டிற்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நடாத்தப்பட்டுவரும் பிரசவ விடுதிகளில் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 15-12-83 ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் அன்றைய தினம் பி. பகல் 3.30 மணிக்குத்திறக்கப்படும். விரும்பிய கேள்விக்காரர்கள் அப்பொழுது பிரசன்னமாய் இருக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் 14-12-83 ம் திகதிபுதன்கிழமை பி. பகல் 3.00 மணி வரையும் ரூபா 50/- வைப்புப் பணமாகவும், ரூபா 5/- கேள்விப் பத்திரக்கட்டணமாகவும்செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் கீழ் கையொப்பம் வைத்திருப்பவரிடமிருந்து அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் பற்றிய ஏனைய விபரங்களையும் நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதாரப் பகுதி
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம். 24-11-83

10231

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை பல்லவராயன்கட்டு உப அலுவலகக் கட்டிடக் காணியில் நீர் விநியோக தண்ணீர்த் தாங்கி அமைப்பதற்கான கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை பல்லவராயன்கட்டு உப அலுவலகம் அமைந்துள்ள காணியில் வலைப்பாடு கிராம நீர் விநியோகத்திற்கான தண்ணீர் தாங்கி (Water Tank) அமைப்பதற்கான கேள்விகள் ரூபா 50,000/-க்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட தகுதிவாய்ந்தஒப்பந்தக்காரர்களிடமிருந்து 12-12-1983 ம் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு பிரதிச் செயலாளர் (வேலை), யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் காலை கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதியில் அரசுக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் பிரதிச்செயலாளர்(வேலை), யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை, த. பெ. இல. 19, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்விப் பிணைப்பணம் ரூபா 100/-ம் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 50/- ம் செலுத்துவதன்பேரில் பல்லவராயன்கட்டு உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் இதற்கான கேள்விப்பத்திரம் 7-12-1983 ம் திகதி தொடக்கம் 8-12-1983 ம்திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும். இவ்வொப்பந்த வேலை பற்றிய மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை பிரதிச் செயலாளர் (வேலை) அவர்களின் அலுவலகத்திலும், பல்லவராயன்கட்டு உப அலுவலகத்திலும் அலுவலகநேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ச. இராசநாயகம்
அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்தி
சபை உப அலுவலகம்,
வேரவில்.

10227

## திகதி மாற்றம்

பொன்னாலை நெல்லியான் இளைஞர் கழக கட்டிட நிதிக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 15-1-84 அன்று நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

பொன்னாலை நெல்லியான் இளைஞர் கழகம்.

(10241)

## தச்சர்கள் தேவை

### யூனிபோ-UNIFO

ஒப்பந்த அடிப்படையில் மரத் தளபாடங்கள், நிலை, யன்னல், கதவுகள் செய்வதற்கும் பொலிஷ் பண்ணுவதற்கும் உரிய திறமையான தச்சர்கள் உடன் தேவை.. நற்சான்றிதழ்களுடன் காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் வரவும்.

ஐக்கிய குடும்பங்கள்
கைத்தொழில் நிறுவனம்,
பலாலி வீதி, உரும்பிராய்.

## ஓராண்டு நிறை நினைவு

### செல்வன் கணேசன் சுதர்சன் (பாபு)

மண்ணில்
17-2-1961

விண்ணில்
10-12-1982



எவ்வுளமுங் குளிர ஒளிர் இளமதியே எங்கும் நிறைபுகழ்மணக்கும் எழில் மலரே செவ்வியுறும் எங்கள் குலம் தழைக்க வந்த செம்மை தவழ் சுதர்சனா நீ சென்றதெங்கே.

உமது பிரிவால் வாடும்
பப்பா, அம்மா, அக்கா, தங்கைமார், தம்பி,
உறவினர், நண்பர்கள்.

75/2, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (10210)

## அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நம்பிக்கைச் சட்டத்தின் 42 (2)ம் பிரிவின் கீழான விண்ணப்ப விடயத்தில்:

(1) முருகேசு கதிர்காமத்தம்பி,
(2) சுப்பிரமணியம் பாலச்சந்திரன்,
(3) சண்முகம் செந்தூர்ராஜா,
(4) நீலக்குட்டி கதிர்காமத்தம்பி, எல்லோரும் துன்னாலை வடக்கு அல்லையம்பதி ஸ்ரீசிவசுப்பிரமணியர் தேவஸ்தானம்.

மனுதாரர்கள்

வழ. இல; TR 126

துன்னாலை வடக்கு அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோவிலுக்குரியதும் பின்னாற்காணும் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ளதுமான ''சாளம்பன் நி. பர. 18'' எனும் ஆதனத்தை விற்பனை செய்ய குறித்த கோவிலின் தர்மகர்த்தா சபையினர் என்ற வகையில் மேற்குறித்த மனுதாரர்கள் இம்மன்றிற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இவ் விண்ணப்பத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் அவற்றை இவ்விடயத்தில் அக்கறையுள்ள ஆள் எவரேனும் இம்மன்றில் 1983 மார்கழி ஏழாம் திகதி காலை 9 மணிக்கு தோற்றி தெரிவிக்கலாம் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறித்த அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று புலோலி மேற்கு வென்றியாகுதேவன் குறிச்சியிறை. ''சாளம்பன் நி. பர. 28'' இதற்கு நில அளவையாளர் வே சிவரத்தினத்தால் 1976-12-18ம் திகதி 3535ம் இலக்கத்தில் வரைந்தாரிக்கப்பட்ட படத்தின்படி 1ம் துண்டுக்கு நி.பர. 18 இதற்கு எல்லை கிழக்கு வீதி வடக்கு ஒழுங்கை மேற்கு நீக்கப்பட்ட குசவன் தோட்டம் நி.பர. 12 குளி 01 23/32 எனும் ஆதனம் தெற்கு குறித்த படத்தில் 2ம் துண்டு இதடங்கல் முழுவதும்.

1983 கார்த்திகை 24ம் திகதி.

(ஒப்பம்)
மு. க. முத்துக்குமார்,
மனுதாரர்களின் சட்டத்தரணி.

10225

பங்களாதேஷில் அரசியல் கலவரம்:

# பொலிஸ் சூட்டில் ஏழுபேர் பலி! 139 பேர் கைது

# 10 பத்திரிகையாளர் படுகாயம்!

டாக்கா, நவ, 29

பங்களாதேஷில் இராணுவ ஆட்சியாளர்களுக்கெதிராக எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்துள்ளன. நேற்று டாக்கா உட்பட அதனை அடுத்துள்ள சில நகரங்களில் கலவரங்கள் மும்முரமடைந்திருந்தன. இதனைத் தொடர்ந்து டாக்கா பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர் மீது சுட்டதில் ஏழுபேர் கொல்லப்பட்டனர்.

பங்களாதேஷ் இராணுவ ஆட்சியாளர்கள் இராணுவச் சட்டங்களை கடந்த சில காலமாகச் சிறிது தளர்த்தியிருந்தனர். நேற்று ஆர்ப்பாட்டங்களும், அவற்றைத் தொடர்ந்து கலவரங்களும் ஏற்பட்டதையடுத்து தளர்த்தப்பட்ட கடுமையான சட்டங்கள் சில மீண்டும் அமுலுக்கு வந்துள்ளன.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணியிலிருந்து ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அத்துடன் ஊர்வலங்கள், அரசியல் கூட்டங்கள், வேலை நிறுத்தங்கள் உட்பட எதிர்க்கட்சிகளின் அரசியல் ரீதியிலான சகல எதிர்ப்புகளுக்கும் தடை விதிக்கப்பட்டது.

பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் நேற்று மாபெரும் வேலை நிறுத்தமொன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தன. இராணுவச் சட்டங்கள் நேற்று கடுமையாக்கப்பட்டதையடுத்து டாக்கா பல்கலைக்கழகம் உட்பட பங்களாதேஷின் பிரதான பல்கலைக் கழகங்கள் சிலநேற்று மூடப்பட்டன.

நேற்றைய ஆர்ப்பாட்டமொன்றில் ஏழு பேர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், 139 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பொலிஸ் அணியொன்றை முரட்டுத்தனமாக எதிர்த்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. பத்து பத்திரிகையாளர்களும் நேற்று பொலிஸாரினால் தாக்கப்பட்டனர்.

பங்களாதேஷில் பொதுத் தேர்தல்களை இந்த ஆண்டுஇறுதியில் நடத்த வேண்டுமென்றே எதிர்க்கட்சிகள் கோரி வருகின்றன. ஆனால் இராணுவ ஆட்சியாளர்கள் முதலில் கிராம சபைத் தேர்தல்களும், அவற்றைத் தொடர்ந்தே அடுத்த ஆண்டில் பொதுத் தேர்தல்களும் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளனர். (கி)

## வங்கிகளில் நகை அடைவு தற்காலிக நிறுத்தம்

(க. ஜீவகதாஸ்)

மக்கள் வங்கிக் கிளைகளில் நகை அடைவுபிடிக்கும் வேலைகள் மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

இதற்கான அறிவித்தல்களை மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு எஸ். ஆனந்தம் சகல கிளை முகாமையாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

## கைவிளக்கினால் ஏற்பட்ட தீ விபத்து; இளைஞர் பலி

(புலோலி)

இரவுவேளையில் கைவிளக்கினால் ஏற்பட்ட தீவிபத்திற்குள்ளான இளைஞரொருவர் பரிதாபகரமாக இறந்தசம்பவமொன்று துணுக்காயில் நிகழ்ந்துள்ளது.

துணுக்காயைச்சேர்ந்த கதிர்காமநாதன் (வயது 19) என்ற இளைஞரே மேற்கண்டவாறு மரணமானவராவர்.

இவரது மரணவிசாரணைகளை உடுப்பிட்டி மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. நடராசா மேற்கொண்டார். பருத்தித்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். சிவகுமாரன் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

மரணவிசாரணையின் போது இறந்த இளைஞர் துணுக்காயில் உள்ளகடையில் இரவு நித்திரை செய்துகொண்டிருந்ததாகவும் அப்போது கைவிளக்கினால் ஏற்பட்ட தீவிபத்திற்கு இவர் ஆளானதாகவும், பின்னர் மல்லாவி அரசினர்வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரின் தாயார் மைத்துனர் உட்பட இன்னும்பலரின் சாட்சியங்களையடுத்து மரணவிசாரணை அதிகாரி விபத்து மரணமெனத்தீர்ப்பு வழங்கினார்.

## முஸ்லிம் மஜ்லிஸின் 'யாழ் பிறை' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை முஸ்லிம் மஜ்லிஸின் யாழ்பிறை வெளியீட்டு விழா நாளை கலாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

மஜ்லிஸின் தலைவர் எம். எஸ். எம் மஃறூப் தலைமையில்நடைபெறும் இவ்விழாவில் பிரதம அதிதியாக கலாசாலை அதிபர் திரு இ. கனகலிங்கம் கலந்துகொண்டு சிறப்பிப்பார். யாழ்பிறை மலரை விமர்சித்து திரு எஸ். மௌனகுரு உரையாற்றுவார். சிறப்புப் பேச்சாளர்களாக யாழ். பல்கலைக்கழக அரபு இஸ்லாமிய பீட விரிவுரையாளர் கே. எம். எச். காலிதீன் (மௌலவி) பலாலி ஆசிரியகலாசாலை ஆங்கில விரிவுரையாளர் எம். எஸ். ஏ. றகீப் ஆகியோர் கலந்து கொள்வார்கள். வரவேற்புரையை ஜனாப் ஈ. எம். நஸீரும், வெளியீட்டுரையை ஜனாப் ஏ. அஸீஸும் பதிலுரையை மலர் ஆசிரியர் ஜனாப்எம். ஐ எம். முஸ்தபாவும் நன்றியுரையை ஜனாப் எம். ஐ. அப்துல் றவூபும் நிகழ்த்துவர்

## கொலம்பியாவில் 6 விண்வெளி வீரர்

வாஷிங்டன், நவ. 29

விண்வெளி விமானமான 'கொலம்பியா' நேற்று தனது ஒன்பதாவது பயணத்தை வெற்றிகரமாக ஆரம்பித்தது.

அமெரிக்காவின் கென்வர் முனையிலிருந்து நேற்று இலங்கை நேரப்படி இரவு ஒன்பது மணிக்குபுறப்பட்டது.

'கொலம்பியா'வில் இத்தடவை ஆறுவிண்வெளி வீரர்கள் செல்கின்றனர். இவர்களில் ஒருவர் மே. ஜெர்மனைச்சேர்ந்தவர். இப்பயணத்திலேயே இவ்வாறு அதிகளவில் வீரர்கள் பயணமாகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பதினறுதொன்கள் எடையுள்ள ஆய்வுகூடமொன்றையும் இத்தடவை 'கொலம்பியா' கொண்டு செல்கிறது. இவ்ஆய்வுகூடத்தில் இந்தியாவின் காற்றுமண்டலம் பற்றிய பரிசோதனைகளும் நடத்தப்படும்.

நேற்று காலநிலை சீரற்றுக் காணப்பட்டதால் கொலம்பியாவின் இப்பயணம் தடைப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் திட்டமிட்டபடியே சகலதும் நிறைவேறின. (கி)

## பஸ் விபத்து: எண்மர் பலி!

சென்னை, நவ. 29

தமிழ்நாட்டில் திண்டிவனம் அருகே பயங்கர பஸ் விபத்தொன்றில் எட்டுப் பேர் நேற்றுக் கொல்லப்பட்டனர்.

பலியானவர்களில் 5 பேர் ஸ்தலத்திலும், மூவர் வைத்தியசாலையிலும் மரணமடைந்தனர்.

52 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் 13 பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது.

திண்டிவனத்தில் திருமணச் சடங்கு ஒன்றிலிருந்து வந்த பஸ் வண்டியும், போக்குவரத்துச் சேவை பஸ் வண்டியொன்றும் மோதியதாலேயே இவ்விபத்து நிகழ்ந்தது.

போக்குவரத்து பஸ் வண்டிச் சாரதி அபாயமான நிலையிலுள்ளார். மற்றைய வண்டியின் சாரதி ஸ்தலத்திலேயே பலியானார்

## ஜனநாயகத்தை மீட்கும்படி 'காமன்வெல்த்'துக்கு மகஜர்!

### பாக். ஜனநாயக மீட்பு இயக்கம் சமர்ப்பித்தது!

இஸ்லாமாபாத். நவ, 29

'காமன் வெல்த்' அமைப்பிடம் பாகிஸ்தானில் ஜனநாயக உரிமைகளை மீட்டுத் தரும்படி மகஜர் ஒன்றுசமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடிவரும் இயக்கமே இந்த மகஜரைச் சமர்ப்பித்தது.

புதுடில்லியில் ஓய்வுக்குப் பின்னர் நேற்று ஆரம்பமான காமன் வெல்த் கூட்டத்தொடரின் போதே இம்மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: "பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியால் சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ளது. மக்களின் நடைமுறை வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சிந்து மாகாணத்திலேயே இராணுவ ஆட்சியாளரின் கெடுபிடிநிலை உக்கிரமாகஇருந்தது. அங்கு நூற்றுக்கணக்கானவர்கள் ஆட்சியாளர்களால் கொல்லப்பட்டனர். அவை பற்றி பூரண நீதிவிசாரணைக்கு 'காமன் வெல்த்' பாக் இராணுவ அரசிடம் விண்ணப்பிக்க வேண்டும். (கி)

## "அணு ஆயுத வல்லரசுகளின் உச்சிமாநாடு அவசியம்" — ட்ரூடோ

பீக்கிங். நவ, 28

அணு ஆயுத வல்லரசுகள் அணுஆயுத உற்பத்தியைக் குறைக்க உச்சி மகாநாடொன்றை நடத்தவேண்டுமென்று கனடாபிரதமர் திரு. ட்ரூடோ கேட்டுள்ளார்.

திரு. ட்ரூடோ நேற்று சீனப்பிரதமர் திரு. சாவோ சியாங்கை பீகிங்கில் சந்தித்தார். அப்போதே அவரிடம் திரு. ட்ரூடோ மேற்கண்டவாறு கேட்டார்.

சீனா, அமெரிக்கா, சோவியத்யூனியன், பிரான்ஸ், பிரிட்டன் ஆகியனவே உலகின் ஐந்து முக்கிய அணுஆயுத வல்லரசுகளாகும். இந்த ஐந்து நாடுகளும் ஒன்று கூடி தமது அணுசக்தி பலத்தைக் கட்டுப்படுத்தலாம் என்றுதிரு ட்ரூடோ கருதுகிறார்.

சீனப்பிரதமர், திரு. ட்ரூடோவின் கோரிக்கையை நன்கு செவிமடுத்தாரென்றும், ஆனால் அணுஆயுத நாடுகளின் உச்சி மாநாடு எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதுபற்றி கருத்து எதனையும் அவர்வெளியிடவில்லையென்றும் கூறப்பட்டது. (இ)

ஆரம்ப நிலையிலிருந்து
விசேட ஆங்கில வகுப்புகள்
SPOKEN ENGLISH COURSE
ஆசிரியர்: திரு. T. N. பஞ்சாட்சரம்
BASIC ENGLISH Course
ஆசிரியர்: திரு. K. சபாநாயகம்
ஆரம்பம் 7-12-83
★ தொழில் செய்வோர்க்கும் ஏனையோருக்கும் ஏற்ற பயிற்சி
★ இலவச பயிற்சிக் குறிப்புகள்
விபரங்களுக்கு:
ASTAN INSTITUTE
166/1, HOSPILAL ROAD — JAFFNA.

வெளிநாடு செல்வதற்கு
★ விமான டிக்கட்
★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
★ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்
(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)
இன்றே நாடுங்கள்
மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

## மணிவாக்கு

மனித சமுதாயம் மனிதர்கள் யாவரும் துவக்கத்தில் ஒரே சகோதரத்துவ சமுதாயத்தினராகவே இருந்தனர்.

—திருக்குர் ஆன்

# நமதுநோக்கு

## தாய்மொழிக் கல்விக்கு ஒரு திருப்பம்

வருகிற வருடம் உலகின் மிகச்சிறந்த இலக்கிய நூல்களில் நூறு சிங்களத்தில் மொழிபெயர்க்க கலை கலாசார அமைச்சு நடவடிக்கைகள் எடுக்கின்றது.

ஆங்கில இலக்கியம் வகித்துவந்த உயர்நிலையை சிங்களம் எடுக்கவேண்டும் என்ற அவசியத்தை சிங்கள மக்கள் உணரவும் அதனை அவர்களுக்கு உணர்த்தவும் அமைச்சின் நடவடிக்கை அவசியமானது; பாராட்டுக்குரியது.

மாணவர், இளைஞர், மன விசாலம், ஆழம் விருத்தியடைய உதவுவதற்கு இலக்கியமே முதன்மையானது; இன்று இலக்கியம் உலகின் நிலையைஅற்புதமாக மாற்றிவைத்த, வைக்கும் விஞ்ஞானத்தின் அடிப்படைக் கருத்துக்களை உள்ளடக்குமென்பதில் ஐயமில்லை; இலங்கு நூல்களுடன் இன்றைய இலக்கியமும் சேர வேண்டும்.

மாணவர் கல்விக்கு தேவையான பலவற்றில் இது ஒரு சிறு பங்கே. தாய்மொழி மூலம் கல்வியே மனித வளர்ச்சிக்கு சிறந்த கருவியென்பதை இனி எவரும் ஆட்சேபிப்பதில்அர்த்தமில்லை; ஆனால் அதன் பலவீனம் மாணவனின் பூரண வளர்ச்சிக்கு இன்னும் முட்டுக்கட்டையாகவே இருக்கின்றது.

சிங்களம், தமிழ், மூலம் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களின் மன எழுச்சி அவர்கள் கண்களின் பிரகாசத்தில் காணமுடியும்.

ஆங்கிலம் படித்து அதன் மூலம் கல்விகற்ற நாம் எத்தனை வருடங்களை வீணாக்கினோமென்பது, ஆங்கிலத்துக்கு இன்றும் 'பந்தம் பிடிக்கும்' சிலரைத்தவிர மற்றெல்லோருக்கும் வெளிப்படை.

உலக மகாகவி தாகூர் இது பற்றிக் குறிப்பிட்டபோது: ''மழையில்லாத பாலைவனத்தின் புழுதியில் மரம் வளர்க்கவேண்டுமானால், விதை மட்டுமல்ல, மண்ணையும் தண்ணீரையும் தொலையூரிலிருந்தே வருவிக்கவேண்டும்'' என்கிறார்.

சிங்களம் ஆட்சிமொழியான பின் சிங்களமக்கள், மாணவர்கள் மத்தியில் ஒரு எழுச்சி உண்டாவதை நாம் காண்கின்றோம்; அந்த எழுச்சி தமிழ் மாணவர்களில் இல்லை என்பதல்ல.

ஆட்சிமொழியாகவும் பல்கலைக்கழக அறிவுமொழியாகவும் அரியவாய்ப்புக்கிடைக்குமானால்தேசியக்கல்வி நாட்டின், மக்களின் மனோபாவத்தை தீவிரமாக மாற்றி அமைக்கும்; இனக்கலவரமென்பது பண்டைக்கால வரலாறாய்விடும்.

இன்று வேண்டா வெறுப்பாய் நடத்தப்படும் இவ்விதப் பயிற்சியால் உருவான கல்வி நிலைமையை நாம் கருதவில்லை. தேசியக் கல்வி என்ற முறையில் சில நூல்களை ஆதாரமாகக் கொண்டு ஆசிரியர்கள் தாய் மொழியில் கல்வி போதிக்கின்றனர்; சிந்தனைத் திருப்பம் கணிசமான முறையில் ஏற்படவில்லை.

நூல்களும் தரமற்றவை; கற்பித்தலில் மொழிமாற்றமே காணப்படுகிறது; எனவே தாய்மொழிக் கல்வியில் உருவாகும் மாணவர்களுக்கு இன்றைய ''நவீன உலகின் விஞ்ஞானத் துறையில் என்ன வளர்ச்சியுண்டு; சிந்தனைத் திறன் 'தொப்' பென்று விழுந்து விட்டது'' என்று குறை கூறுவது நியாயமானது.

விஞ்ஞானத் துறையில் தாய்மொழியில் சிந்தனை விருத்தியின்மைக்குக் காரணம் என்ன? ஆங்கிலத்தில் உள்ள ஆற்றலும் வளமும் தமிழில் இல்லை. எத்தனை வருட பிரலாபம் இது?

இல்லை இல்லையென்றுஇன்னும் நாம் சொல்லத் துணியலாமா?

ஆங்கிலத்தில் அவ்வித வளம் எவ்வாறு ஏற்பட்டது? 1930ல் நொபல் பரிசு பெற்ற சேர் சி. வி இராமனும், இன்று அம்மாபெரும் பரிசு பெற்றிருக்கும் திரு சுப்பிரமணியம் சந்திரசேகரரும் உலகப் புகழ் பெற்ற தமிழ் விஞ்ஞானிகளே; இருவரும் தமிழில் பாண்டித்தியமுடையவர்; அவர்களின் விஞ்ஞான நிபுணத்துவத்துக்கு ஆங்கிலம் உதவியிருப்பதை வற்புறுத்த வேண்டியதில்லை 19 வயதிலேயே விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்ட திரு சந்திரசேகரருக்கு, இன்று நட்சத்திர ஆய்வுக்கு நொபல் பரிசு கிடைத்திருக்கிறது.

அவ்வளவு தூரம் போகாமல், எங்கள் நேற்றைய பத்திரிகையில் வான சாஸ்திர விற்பன்னர் அலன் ஆபிரகாம் பற்றி எழுதப்பட்டிருக்கிறது; அவருக்குண்டான ஆங்கில அறிவாஅந்த அரும் சாதனைக்கு வழிகோலியது; அவர் ஒரு தமிழ்ப் பண்டிதரும் புலவரும், பத்திரிகாசிரியரும்.

உண்மையென்னவென்றால் ஆங்கிலப் பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி, ஆலயங்கள் தம் தாய் மொழியாகிய ஆங்கிலத்தின் வாயிலாகவே பிறநாட்டு நல்லறிஞரின் கருத்துக்களை உணரத்தலைப்பட்டன.

எந்தத் துறையிலும் நல்ல நூல்கள் வெளிவர வேண்டுமானால் அதற்கு முன்பே அத்துறையில் சிந்தனை வளர்ச்சி அதிகரிக்க வேண்டும். அந்நிலையில் தான் செம்மையான நூல்கள் எழுத முடியும்.

இலங்கை கலை கலாசார அமைச்சு சிங்களத்துக்கு எடுக்கும் நடவடிக்கைகள் போன்றவை தமிழுக்கும் கிடைப்பதற்கு நாம் தமிழ் மக்கள் சுதந்திரத்துக்கு காத்திருக்க வேண்டுமா?

## "விசேட நீதிமன்றமளவுக்கு இந்துசமயத்தில் பிரச்னையா?"

### இந்து இளைஞர் பேரவைத் தலைவர் கேட்கிறார்

(மாவிட்டபுரம்)

இந்துசமய மக்களின் பிரச்சனைகளை தீர்வுகாண விசேட நீதிமன்றம் அமைக்கும் அளவுக்கு இந்துசமயத்தில் பிரச்னைகள் அதிகரித்துள்ளதா? மக்கள் இதை சிந்தித்துச் செயல்படவேண்டும்.

இவ்வாறு இந்து மக்களை கோரும் அறிக்கை ஒன்றை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத்தலைவர் திரு. சி. சண்முகலிங்கம் விடுத்துள்ளார்.

பிராந்திய அமைச்சர் திரு. செ. இராசதுரை, இந்துமக்களின் பிரச்னைகள் பற்றிவிசாரணைசெய்ய விசேட நீதிமன்றம் ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ள அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

''பிறசமயங்களில் இல்லாத அளவுக்கு எம்சமயத்தில் பிரச்னைகள் அதிகரித்துள்ளதா? இன்று விசேட நீதிமன்றம் அமைக்கும் அளவுக்கு எம் பிரச்னை விஞ்சிஉள்ளதா என்பதை சைவமக்கள் சிந்திக்க வேண்டும்.

''ஆகவே சைவ சட்ட அறிஞர் சபை ஒன்றை உருவாக்கி அந்த சபையின் மூலம் எம் பிரச்னைகளை சமாதான முறையில் தீர்க்க எம்மக்கள் முன் வரவேண்டும்.

''எம்சமயத்துக்கு மட்டும் நீதிமன்றம் அமைக்கும் துர்பாக்கிய நிலையை தவிர்க்க சகல சைவமக்களும் இணைந்து செயல்படவேண்டியது அவசியமாகும்'' என்றார்.

## கடவுளைவேண்டும் புதியமுறை

(மாவிட்டபுரம்)

அமெரிக்காவில் உள்ளது போன்றுதம் குறைபாடுகளை கடவுளிடம் முறையிட்டு பரிகாரம்காணும் துண்டுஓமகுண்டத்தில் சேர்க்கும் முறையை அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தினரும் ஆரம்பித்துள்ளனர்.

அமெரிக்காவில் இயங்கும் சிவாய ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகளின் ஆச்சிரமத்தினர் அங்குள்ள மக்களின் குறைபாடுகளை கடவுளிடம் முறையிட்டு பரிகாரம் காண ஒரு துண்டில் எழுதி, அங்கு நடைபெறும் விசேட அபிடேகத்தில் இடம் பெறும் ஓமகுண்டத்தில் சேர்ப்பிக்கும் வழக்கம் இருந்து வருகிறது. இதே நடைமுறையை அளவெட்டியில் இயங்கும் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தின் ஆதரவிலான சிவன் ஆலயத்திலும் ஆரம்பிக்கும்படி ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகளால் பணிக்கப்பட்டதுக்கமைய இங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதத்திலும் வரும் முதல் திங்கட்கிழமை மேற்படி ஆலயத்தில் இடம் பெறும் ஓமகுண்டத்தில் இங்குள்ள மக்கள் தம் குறைகளை ஒரு துண்டில் எழுதி சேர்ப்பித்து கடவுளை வேண்டுதல் செய்கிறார்கள். இலங்கையில் இப்படியான நடைமுறை இங்குதான் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது

## மின்னேரியாவில்

### ஸ்ரீமா மகள் போட்டி?

(கொழும்பு)

மின்னேரியா இடைத்தேர்தலில் திருமதி ஸ்ரீமாவோபண்டாரநாயக்காவின் இளைய புதல்வி திருமதி சந்திரிகா குமாரணதுங்காசுயேச்சையாக போட்டியிடலாமெனத் தெரிய வருகிறது.

மேற்கு ஜெர்மனியிலிருந்து தனது கணவரான திரு. விஜய குமாரணதுங்கா நாடுதிரும்பியதும், தனது இறுதிமுடிவைத் திருமதி சந்திரிகா அறிவிப்பாரெனக்கூறப்படுகிறது.

திரு. ரத்னதேசப்பிரிய சேனநாயக்கா, மின்னேரியா இடைத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுவாரென ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து திரு விஜய குமாரணதுங்கா தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## கிளிநொச்சி அகதிகள் முகாமில் மோசடி, ஊழல்!

### உதவி அரசாங்க அதிபரிடம் புகார்

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சியில் உள்ள அகதி முகாம்கள் சிலவற்றில் ஊழல்கள் மோசடிகள் நடைபெற்று வருவதாக கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் கே. சுப்பிரமணியத்திடம் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன,

''மலையகம், தென்னிலங்கை போன்ற பகுதிகளில் இருந்து பாதிக்கப்பட்டு சொல்லொணாத் துயரங்களின் மத்தியில் கிளிநொச்சி தஞ்ச முகாம்களில் அகதிகளாக தஞ்சமடைந்த எமக்கு முகாம்களில் பலவித அநீதிகள் இழைக்கப்படுகிறது. உணவில் பாரபட்சம் காட்டப்படுகிறது உடுபுடவைகள் வழங்குவதில் பொருட்கள் விநியோகிப்பதில் மோசடிகள் செய்யப்படுகிறது. இவற்றை நாம் தட்டிக்கேட்டால் சமூக சேவை அதிகாரிகளால் முகாமைவிட்டு வெளியேறுமாறு உத்தரவுபிறப்பிக்கப்படுகிறது. இந்தக்கொடுமையிலிருந்து எம்மைக் காப்பாற்றுங்கள்.''

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை குருகுலம் அகதிமுகாமில் இருந்து கிளிநொச்சி சமூகசேவை அதிகாரியால் வெளியேற்றப்பட்ட பாதிக்கப்பட்ட அகதியான திரு. நாகராசா கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வாறான புகார்கள் அகதிகளிடமிருந்து தினமும் உதவி அரசாங்க அதிபருக்கு வந்த வண்ணம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

[5-ம் கலத் தொடர்ச்சி]

உலக அரசியல் தலைவர்களின் படங்கள் அங்கே தொங்கவிடப்பட்டுள்ளன சேர். பொன். இராமநாதனை வண்டி ஒன்றில் வைத்துப் பெரும்பான்மை இன அரசியல் தலைவர்கள் இழுக்கிறார்கள். இப்படி ஒரு படமும் அங்கே தொங்குகிறது

—லீலா

## கொழும்பு சில விபரம்

வாழை இலையில் சாப்பிட்டு பல நாளாயிற்றே! யாழ்ப்பாணச் சாப்பாட்டுக் கடைக்குப் போனால் சாப்பிடலாம் எனக் கொழும்பு கோட்டை ஆஸ்பத்திரிவீதிக்கே கூட்டிச் சென்றார் ஓர் நண்பர்!

அந்த நாட்களில் யாழ். என்ற பெயரில் பல ஹோட்டல் போட்டுக்களை அங்கு காணலாம். அந்த மாதிரி ஓர் போட்டை பார்த்ததுடன் நுழைவோம்என அங்கலாய்த்தவாறு வீதி முடியும்வரை மத்தியான வெய்யிலில் நடந்து களைத்ததுதான் மிச்சம்! அப்படி ஒரு சாப்பாட்டுக் கடையையும் காணோம். இறுதியில் ஓர் இடத்தில் நின்று பார்த்த போது நண்டு, றால், கணவாய், ஆடு, கோழி என சிங்களத்தில் எழுதிய பலகை, ஒன்றைக் கண்டேன். உள்ளே நுழையும் போதே 'என்ட, என்ட' என அன்பாக வரவேற்றார்கள். உள் சென்று அப்பாடா என அமர்ந்தோம். 'ஐயாவுக்கு சாப்பாடு, நண்டா, கோழியா எனக் கேட்டு முத்தையா அண்ணை, சின்னையா அண்ணை, இலை போடு' எனக் கத்தினார்கள் ஆம் அது ஓர் யாழ்ப்பாணக் கடைதான்!

இவ்வாறுதான் செக்கடித் தெருவிலும் மற்றும்சிலஎங்கள் பழைய இடங்களிலும் சாப்பாடு கொடுக்கிறார்கள்.

இடிபட்ட பல கடைகளுக்கு முன்னால் 'திடீர்' பெட்டிக் கடைகள் சிலவும் தோன்றியுள்ளன. வெள்ளவத்தை சைவக் கடைகள் சில இவ்வாரம் முதல் ஆரம்பித்துவிட்டன. விலை உசத்தி!

### அகதிமுகாமில் பாடசாலைகள்

கொழும்பிலுள்ள அகதிகள் முகாம்கள் பலவற்றில் மாலை நேர சிறுவர் பாடசாலை, சமய வகுப்புகளை நடத்துகிறார்கள். இன்னும் ஒரு மாதம்வரை இருக்கவேணுமே. அதுவரை சிறுபிள்ளைகளுக்கு இந்த வகுப்பு ஆரம்பித்தது நல்லதுதான்.

வெள்ளவத்தைக் கோயிலுக்குப் பக்கத்தில் பூக்கடை வைத்திருந்த ஒருவர் இன்று முகாமில் இருக்கிறார். ஏன் கடை நடத்தவில்லையா என்று கேட்டபோது இன்னும் ஒரு மாதம்வரை இந்த முகாம் இருக்கும் ஐயா. அதுவரை இருந்தால் போகும்போது காசு கொடுப்பார்கள். பிறகு ஒருமாதிரி வியாபாரம் ஆரம்பிக்கலாம் என்றார். ஏன் இந்தியா போகவில்லையா என்று கேட்டபோது பிழைச்சுப் பழகிய ஊர் ஐயா இது இதை விட்டு எங்கும் போகமாட்டேன்'' என்றார்.

பம்பலப்பிட்டி பெரிய சைவக் கடைக்குப் பக்கத்தில் டாக்ஸி வைத்து ஓட்டியவர் வடிவேலு. ''கார் எங்கே'' என்றேன். கலவரத்தில் காரை சிங்கள நண்பரொருவர் குடும்பத்தோடு இரத்மலானை முகாமில் இருந்துவிட்டு வந்தேன். காரை விற்று விட்டேன். வீட்டில் விட்டிருந்தேன். சிங்கள முதலாளி ஒருவரின் டாக்ஸிதான் இது. இப்ப பயமில்லாமல் ஓட்டிப்பிழைக்கிறேன். பாருங்க நம்பிக் கொடுத்திருக்கிறார் 'காரை' என்றார்!

பழம்பெரும் அரசியல் ஆலோசகரும், சைவப்பெரியாருமான திரு. சு சிவசுப்பிரமணியம் ஐயா கொழும்பில் தான் இருக்கிறார் கோட்டடியில் உள்ள அவரின் மருமகன் வீட்டில் அமைதியாக இருக்கும் அவரின் உடல்நிலைதெளிவில்லை. 84 வயது அவருக்கு! உள்ளமும், தமிழ் உணர்வுகளும் தெளிவாக இருக்கிறது.

[4-ம் கலம் பார்க்க]

# இன்றைய பலன்

கார்த்திகை 14-ந் திகதி
புதன்கிழமை
(30-11-83)

மேடம்: அவசரப் போக்கினுல் அதிகாரிகளைப் பகைத்துக் கொள்வீர்கள், எதற்கு எடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும், தவறானவழிமூலம் பணம் பாழாகும், முகமன் கூறுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கைவேண்டும்,

இடபம்:- உயர்ந்த எண்ணங்கள் உங்களை புகழின் உச்சத்திற்கு அழைத்துக் செல்லும் தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும், சால் நடை விருத்திக்கும் இடமுண்டு, பிதாவின் உதவியும் கிடைக்கும்.

மிதுனம்:- செய்தொழிலில் சிறப்பான இடம்கிடைக்கும், வெளியூர் அன்பர்கள் உங்களை வரவேற்பதற்குக் காத்திருப்பர், முயற்சிகளுக்கு நண்பர்களின் துணை உண்டு. நிதியில் திருப்தி கிடைக்கும்.

கடகம்; வருமானத்தில் அபிவிருத்தி காணப்படுகிறது, கடந்த சிலநாட்களாக நிலவி வந்த தயக்கநிலை இன்று நல்ல திருத்தத்தை ஏற்படுத்தும், பிறந்தகத்தில் இருந்து அழைப்பிதழ்கிடைக்கலாம்.

சிங்கம்: இதயம் எரிமலையாகும், எதிரிகள் தாக்குவர், ஏமாற்றத்திற்கு இடமுண்டு, கரும்புபோல் இனித்தவை இன்றுவேம்புபோல் கசக்கும், உள்ளக்கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும்.

கன்னி: ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு, குறுக்குவழிகளில்இறங்கவேண்டாம் வீட்டில் சிறுபிணி தலைதூக்கும், சிறிய விடயத்தில் கூடபெரியகோபம் ஏற்படலாம்.

துலாம்: பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது கொடுக்கல் வாங்கல் மூலம் ஆதாயத்துக்கும் இடமுண்டு வசீகரப் பேச்சின்காரணமாக எதிரிகளை உங்கள்பக்கம் மாற்றுவீர்.

விருச்சிகம்: உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும் பண விவகாரத்தில் பகை தோன்றலாம், துதிபாடிக்கொண்டே சிலர் துரோகச் செயலில் ஈடுபடுவார்கள்.

தனு: மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு, மனம் போல் யாவும் நடக்கும், கல்வியில் சிறப்புக்கிடைக்கும், உறவினர் கொண்டாட்டமும் விருந்தினர் வருகையும் உண்டு.

மகரம்: வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அதுமேலும் குட்டி போடும், புத்திரர் ஒருவரின் வெளியூர் பயணம் மகிச்சியைத் தரும், கடல்றெழிலில் ஈடுபடுவோர்க்கு லாபம் உண்டு.

கும்பம்: எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும், சகோதர வழியால் சஞ்சலப்படுவீர்கள், காதல் விவகாரத்தால் உறவினர்களுடன் பகைத்துக்கொள்ள நேரிடும்.

மீனம்: காதலர்களுக்குக் குக் கனகுசியான தினம், பெற்றோர்களின் ஆதரவுண்டு. இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும், காதரர்களின் சந்திப்பு மூலம் திடீர் திருமணம் நடைபெறலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

---

நம்பிக்கை மேசடி:

# எதிரி விடுதலை

(புலோலி)

50,000 ரூபா பெறுமதியான தங்க நகைகளுக்கு நம்பிக்கை மோசடி செய்ததாகப் பெண் ஒருவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

பருத்தித்துறை புலோலி கிழக்கைச் சேர்ந்த முத்துக்குமாரு சீமந்தினி என்பவர் சங்குவேலி மானிப்பாயைச் சேர்ந்த பொன்னையா சண்முகநாதன் என்பவரிடம் 18½ பவுண் எடையுள்ள சுமார் 50 000 ரூபா பெறுமதியான தங்க நகைகளை பெற்று நம்பிக்கை மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டி யாழ். விசேட குற்றப்புலன் விசாரணை பகுதிப் பொலிசாரினுல் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நம்பிக்கை மோசடிவழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு சே. கணபதிப்பிள்ளை முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணி கே. ஜெயசிங்கமும் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். கணேசராசாவின் உதவியுடன் சட்டத்தரணி கே. எஸ். பாலகிருஷ்ணனும் ஆஜராகியிருந்தனர்.

விசாரணையைத் தொடர்ந்து நீதவான் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கைத் தவிரமேலும் நான்கு நம்பிக்கை மோசடி வழக்குகள் சீமந்தினிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் 68¼ பவுண் எடையுள்ள சுமார் 1,74,1:5 ரூபா தங்க நகைகளுக்கு நம்பிக்கை மோசடி செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வெ)

---

# அகதிகளுக்கு மங்கையர் கழகம் உதவி

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட மங்கையர் கழகத்தினர் சமீபத்திய வன்செயல்கள் காரணமாக இங்கு அகதிகளாக வந்துள்ளவர்களுக்கு சமயலறைப் பொருட்களை அன்பளிப்புச் செய்து வருகின்றுர்கள்.

சில தினங்களுக்கு முன் கோண்டாவில் பகுதியில் அகதிகளாக வந்துள்ளவர்களுக்கு இத்தகைய பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. இன்னும் சில கிராமங்களில் விரைவில் அகதிகளுக்கு இத்தகைய பொருள்கள்வழங்கப்பட விருக்கின்றன எனத்தெரியவருகிறது.

கோண்டாவிலில் இந்த அன்பளிப்புக்களை திருமதி யோகேந்திரா துரைசாமி வழங்கினுர்.

சுமார் முப்பதுகிராமங்களில் இத்தகைய அன்பளிப்புப் பொருள்கள் அகதிகளுக்கு வழங்கப்பட விருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்திலுள்ள சில அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு பற்பொடிகள் இல்லாத காரணத்தால் இவர்கள் காலைக் கடன்களைச் செய்யமுடியாது கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

---

# மானி. இந்து ஒன்றியம் புனரமைப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி விடுதி மாணவர் ஒன்றியம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. தலைவர்: கே. மோகனதாஸ், செயலாளர்: கே. கருணுகரன், பொருளாளர்: எஸ். முரளிதரன், உபசெயலாளர்: ரி, ஜீவரத்தினம். ஐவர் கொண்ட குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

# ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 இன்றைய நிகழ்ச்சிகள்
6-02 'பிக்புளூ மாபிள்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-30 'வேர்சல் கம்மிட்ஜ்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
7-00 செய்திகள் (தமிழ்)
7-14 நாளைய நிகழ்ச்சிகள்
7-15 தகவல் நிகழ்ச்சி
7-45 விவரணச் சித்திரம்
8- 5 செய்திகள் (சிங்களம்)
8-30 நாடக நிகழ்ச்சி (சிங்களம்)
9-15 'தாமரை நெஞ்சம்' தமிழ்த் திரைப்படம்
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத் தொடர்ச்சி

---

# விவசாயிகள் பாதிப்பு

(மாவிட்டபுரம்)

பணம் செலுத்தியும் விதை உருளைக்கிழங்கு கிடைக்காததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடபகுதி விவசாயிகளுக்கு வேண்டிய விதை உருளைக் கிழங்கை வழங்கிவரும் நுவரெலியா விவசாய ஆராய்ச்சி இலாகா, இம்முறை தமது லொறிகளில் இங்குகொண்டுவர மறுப்பு தெரிவித்ததால் இங்கிருந்து விவசாயப்பகுதியால் லொறிகள் அனுப்பப்பட்டு விதைஉருளைக்கிழங்கு கொண்டுவரப்படுகிறது இப்படியான செயலால் விவசாயிகள் பணம்செலுத்தி பலவாரம் காத்திருந்தே கிழங்கைப் பெறவேண்டியுள்ளதாம்!

---

# தற்கொலை

(மன்னூர்)

கடன் தொல்லையைத் தாங்க முடியாத இரண்டு பிள்ளைகளின் தந்தை கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

தலைமன்னூர் துறைமுகப் பகுதியைச்சேர்ந்த 28வயதான ஏ. தங்கராஜா என்பவரே கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டவராவர். இம்மரணம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி ஜனுப். எம். பி ஏ. ஜப்பார் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

---


# CANTABIA INSTITUTE

## 1984 MAY-JUNE-DECEMBER

பரீட்சைக்கான வகுப்புகள்
ஆரம்பமாகும் திகதிகள்

| | |
|---|---|
| Chartered Preliminary | 3-12-83 |
| I. A. A. Part I | 3-12-83 |
| I. A. A. Part II | 17-12-83 |
| I. A. B. Foundation | 7-12-83 |
| Intermediate | 14-12-83 |
| Final | 17-12-83 |
| I. D. P. M. Part I | 12-12-83 |
| I. D. P. M. Part II | 14-12-83 |

கவனத்திற்கு

மேற்காணும் ஒவ்வொரு வகுப்புக்கும் பாடங்கள் வேறு வகுப்புகளுடன் சேராமல் தனித்தனியாக நடைபெறும்.

★ OXONIA விரிவுரையாளர்கள் உட்பட பிரபலமான பலர்
★ ஆரம்ப மாணவர்களுக்கேற்ற பயிற்சி
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ இலவச அச்சடித்த வினுத்தாள்களும் விடைகளும்

விபரங்களுக்கு:

கன்ரேபியா
கல்வி நிறுவனம்
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



# ஹோம் பிறுன்ஸ் லிமிட்.

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
கண்ணியமான - பாதுகாப்மான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
இல: 82, கன்றுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310
2. யாழ் மெற்றல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596
3. நியூ ப்ரசீதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480
4. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
463, காலி வீதி,
கொழும்பு-3
தொலைபேசி: 589190—587680

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
157/2, ஸ்ரீ கதிரேசன்வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 83277



# யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

கொலன்ட் வழியாக பிரான்ஸ் செல்வதற்கான சகல ஏற்பாடுகள்
மற்றும் பெல்ஜியம் விசாவுடன் பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PTE) LTD.
STAGE II MODEL MARKET,
No 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA
Phone No. 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 9,500/- ஒரு வழி பயணச்சீட்டு கனடா செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

வடமராட்சியில் — முதன்முதலாக
ASTAN INSTITUTE - Jaffna
IN COLLABORATION WITH
SCIENCE CENTRE
(POINT PEDRO)
விசேட ஆங்கில வகுப்புகள்
இருநிலையில்
INTEGRATED ENGLISH
COURSE
LOWER AND HIGHER LEVEL
ஆரம்பம் 2 - 12 - 83
இரு முன்னணி ஆசிரியர்களின் இணைந்தசேவை
திரு T. N. பஞ்சாட்சரம் — திரு. K. சபாநாயகம்
பாடத்தொகுதி :- 1. ஆங்கில உரையாடல் பயிற்சி
2. இலக்கணமும் பாவனையும்
3. சொல்லியல் விருத்தி
4. வாசிக்க எழுதப் பயிற்சி
விபரங்களுக்கு: நேரில் / தபாலில்
ASTAN
C/o SCIENCE CENTRE
Ponnuchamy Koddam Point Pedro
Head Office: ASTAN INSTITUTE
166/1, Hospital Road, — Jaffna

யாழ். மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள

# பனங்கட்டி தொழிற்சாலைகள் மீண்டும் இயங்க நடவடிக்கை

(புலோலி)

தற்போது வெளிநாடுகளில் பனங்கட்டிக்கு அமோக கிராக்கி ஏற்பட்டுள்ளதையடுத்து யாழ் மாவட்டத்தில் மூடப்பட்டிருக்கும் சுமார் ஐம்பது பனங்கட்டித் தொழிற்சாலைகளையும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் இயங்கச்செய்வதற்கான நடவடிக்கைகளை பனம் பொருள் அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது.

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் ஏற்றுமதி மாதிரிக்கிராமக்கம்பனிகளை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை உருவாக்கி வருவதனுலும் வெளிநாடுகளில் பனங்கட்டிக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதனுலும் வெளிநாடுகளுக்குப் பனங்கட்டியை ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்புக்கிடைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்தே பனம் பொருள் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. கே. நடராஜா மூடப்பட்டிருக்கும் இப் பனம்கட்டி தொழிற்சாலைகளை மீண்டும் திறந்து இயங்கச்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

ஏற்றுமதி மாதிரிக்கிராம கம்பனிகள் அமைக்கப்பட்டதும் இப்பனங்கட்டித்தொழிற்சாலைகள் இக்கம்பனிகளின் கீழ் இயங்கும் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை இவற்றைப் பொறுப்பேற்று பனங்கட்டி ஏற்றுமதியை மேற்கொள்ளவுள்ளது.

# பார்சலில் ஆயுதங்கள்

[யாழ்ப்பாணம்]

மோட்டார் சைக்கிள் நபரினுல் சுன்னுகத்தில் கைவிடப்பட்ட பார்சலில் பயங்கர ஆயுதங்கள் இருந்தனவா?

நேற்றுமுன்தினமிரவுமோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபர் ஒருவர் விட்டுச்சென்றதாகக் கூறப்படும் இரண்டு பார்சல்களைக் கைப்பற்றிய பொலிஸார், ஒரு பார்சலில் நவீன துப்பாக்கிப்பாகங்களும் மற்றைய பார்சலில் சீருடைகளும் இருக்கக்கண்டெடுத்துள்ளனர்.

பொலிஸாரின் தகவலின் படி; பொலிஸாரைக்கண்ட பின்னரே இந்தப் பார்சல்கள் குறிப்பிட்ட நபரினுல் கைவிடப்பட்டதாம்.


# மேர்ச்சன்ட் பினுன்ஸ்

## லிமிட்டெட்

( அங்கீகரிக்கப்பட்ட கிறெடிற் ஏஜென்சி )
4, 1-ம் மாடி, நவீன சந்தைக் கட்டிடம், யாழ்ப்பாணம்.
கூட்டிணைக்கப்பட்ட தேதி : 2 - 05 - 1979

## நிலையான வைப்புத் திட்டங்கள்

| காலம் | வருட வட்டி விகிதம் மாதாந்த வட்டி கொடுத்தல் | வருட வட்டி விகிதம் காலமுடிவில் வட்டி கொடுத்தல் |
|---|---|---|
| 7 மாத வைப்பு | | 15% |
| 9 மாத வைப்பு | | 16% |
| 1 வருட வைப்பு | 18% | 20% |
| 2 வருட வைப்பு | 18% | 22% |

## பிரதான தொழில் வகைகள்

- வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன் வழங்கல்.
- வங்கி, மறுதாபனக் கடன் ஒழுங்கு செய்தல்.
- வர்த்தக வாகனங்கள் (லொறி), உழவு யந்திரங்கள் (ட்ராக்டர்), மினி பஸ் முதலியனவற்றிற்கு வாடகைக் கொள்வனவுக்குக் கடன் கொடுத்தல்.
- இடைக்கால கடன் கொடுத்தல்.
- காப்புறுதி செய்யப்பட்ட பண்டகசாலை வசதிகள்.

## நிதி நிலைமை

| | 31-3-81 ல் முடிந்த வருடத்திற்கு | 31-3-82 ல் முடிந்த வருடத்திற்கு | 31-3-83 ல் முடிந்த வருடத்திற்கு ★ |
|---|---|---|---|
| | ரூ,000 | ரூ,000 | ரூ,000 |
| பங்கு மூலதனம் ... | 100, | 100, | 100, |
| ஒதுக்கிய நிதி ... | — | 300, | 560, |
| நிலையான கடன் முறிகள் ... | 585, | 597, | 597, |
| வைப்புக்கள் ... | 3,444, | 6,615, | 10,157, |
| பெற்ற கடன்கள் ... | — | — | — |
| வரிக்கு முன் லாபம் ... | 193, | 191, | 644, |
| வரிக்கு பின் லாபம் ... | 193, | 191, | 324, |
| வழங்கப்பட்ட பங்கு லாப வீதம் ... | 25% | 30% | — |
| வழங்கப்படவிருக்கும் பங்கு லாப வீதம் ... | — | — | 30% |

★ இவ்வாண்டிற்குரிய கணக்கு எண்பார்வைசெய்யப்படுகிறது.

இயக்குனர் சபை
டாக்டர் யோகு பசுபதி M. B. B. S. (Cey ), D. C. H. (Lond.), M R. C. P. (Lond.) தலைவர்
A. சோமசுந்தரம்பிள்ளை B. A., F. C. A., முகாமைத்துவ இயக்குனர்
K. லோகநாதன் B. S. B. A, (U. S. A) இயக்குனர் - ஆலோசகர்
S. தனபாலசிங்கம் B. Sc (Cey.) இயக்குனர் - முகாமையாளர்
S. மகேந்திரன் B. Sc. (Cey.) இயக்குனர் - கடன் வசதிகள்
K. நடராசா B. Sc. Bar - at - Law, Attorney - at - Law
N. சிவசிதம்பரம் Retd. S. L. A. S.
V. கார்த்திகேசு B. Sc. A. M. B. M. I. M. A, M. I, Prod. E.
(தொலைபேசி: 24183)



மக்கள் சொல்வதைக் கேளுங்கள்....




"பெயார் பிரான்ட்
குடும்பத் தேவைகள்
அனைத்திற்கும் உகந்தது...
உங்கள் பணத்திற்கு
ஒப்பற்ற பெறுமதி தருவது.
குடும்பத்திலுள்ள
அனைவருக்கும் சத்துமிக்க
பசுப்பாலை வழங்க
நான் தேடி வாங்குவது
பெயார் பிரான்ட்"




400 கிராம்
ரூ. 20.80
250 கிராம்
ரூ. 14.50

Grant K & E 5135

# பெயார் பிரான்ட்
## ஆடைநீக்காத பால் மா

மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, சௌந்தரராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
நிறம்பட நடித்த
வர்ணப்படம்
சத்திய
சுந்தரம்

சாந்தி (யாழ் நகர்)
10-30, 2-30, 6-30
மாதர் கூட்டம் திரளும்
8-வது வெற்றி வாரம்!
சிவாஜி-கே. ஆர். விஜயா
ஊரும் உறவும்
வண்ணத்திரை ஓவியம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி— சரிதா
கீழ்வானம் சிவக்கும்
(ஈஸ்மன் கலர்)
Next
THE FINAL CONFLICT

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-15, 1-15,
4-15, 7-15
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றும் பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். -சரோஜாதேவி
பாலாஜி
என் கடமை
(புதிய பிரதி)

இன்று மட்டும்
Rajah JAFFNA
Daily 10-30, 2-00, 4-30
7-00 and 9-30
The Fighters
(Color) (Adults only)
1-12-83 முதல்
சந்திரமோகன் -
ஜெயப்பிரதா
சிரிக்கும் சலங்கை
ஈஸ்ட்மன்கலர் - புதியபிரதி

From 30-11-83
வின்ஸர் (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 7-00
Burt Reynolds
Lesley - Anne Down
in
Rough Cut
Suspense, Robbery,
The crime of a Lifetime
solve by Scotlandyard
Inspector
விரைவில்!
ஆனந்த ராகம்

லிடோ (யாழ். நகர்)
Daily 10-30 a. m. 2-30
4-45, 7-00 only
High
Plainsight

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சுபதினம்

றீகல் (யாழ்நகர்)
தினசரி: 10-30, 2-30,
6-00
ரஜனிகாந்த், ஸ்ரீப்பிரியா
சுமன், சௌகார் நடிக்கும்
தீ
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்ட
புத்தம்புதிய வண்ணப்பிரதி

வெகு விரைவில்
பயணங்கள்
முடிவதில்லை

## முல்லைத்தீவு அபிவிருத்திச்சபை வழங்குநர்களைப் பதிவு செய்தல் —1984

1. 1984ம் ஆண்டுக்குப் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு முல்லைத்தீவு அபிவிருத்திச் சபையுடன் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குனர்கள், ஒப்பந்தக்காரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. ஒவ்வொரு இனவகைப் பொருட்களை விநியோகிப்பதற்குத் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்

3. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபால் மூலம் மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு அபிவிருத்திச் சபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு 14-12-1983 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக உரிய பதிவுக் கட்டணம் / வைப்புப் பணம் ஆகியவற்றுடன் அனுப்பப்படல்வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குனர்களைப் பதிவு செய்தல்—1984' எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

4. பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் பட்டியலில் இருந்து வழக்கமாகக் கேள்விகள் கோரப்படும். ஆனாலும் தேவைகளைப் பொறுத்து வேறு வழங்குனர்களிடமிருந்து கூறுவிலைகளைப் பெற்று பொருட்களைக் கொள்வனவுசெய்ய இச்சபைக்குப் பூரண உரிமையுண்டு.

5. நேர காலத்துக்குக் கூறுவிலைகளை அனுப்பவோ அல்லது கட்டளைகளை நிறைவேற்றவோ தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விபரக்கூற்றுகட்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதவிடத்தும், அத்தகைய வழங்குனர்களின் பதிவுகள் வழங்குனர் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

6. அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன பதிவுக் கட்டணம், வைப்புப் பணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

| | பொருட்கள் | வைப்புப் பணம் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. | காகிதங்கள் / காகிதாதிகள் அச்சடித்தல் பொது வேலைகள் | 250-00 | 50-00 |
| 2. | அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் | 250-00 | 50-00 |
| 3. | சுகாதாரப் பொருட்கள் (மலசலகூட, தோட்டி வீதிவேலை ஆகியவற்றிற்கான களஞ்சியப் பொருட்கள், கோலவுடை ஆகியன | 250-00 | 50-00 |
| 4. | அலுவலக உபகரணம், தளபாடம் ஆகியவற்றுக்கான திருத்த வேலைகள் | 250-00 | 50-00 |
| | மின்சாரம் | | |
| 1. | மின்சேவை இணைப்புக்கள், வீதி வெளிச்சம், மின் உபநிலையங்கள் ஆகியவற்றுக்கான உபகரணங்கள் | 250-00 | 50-00 |
| 2. | பி. வி. சி. மின் வடங்கள், கடத்திகள் | 250-00 | 50-00 |
| 3. | வலுவூட்டப்பட்ட கொங்கிறீற் மின் கம்பங்கள் | 250-00 | 50-00 |

கே. கே. ஞானச்சந்திரன்,
மாவட்ட செயலாளர்,
முல்லைத்தீவு அபிவிருத்திச் சபை

மாவட்ட அபிவிருத்திச் சபை,
முல்லைத்தீவு.
15-11-1983.

10110

## சபைகள் கூடவில்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரித் தொகுதியில் உள்ள 23 கிராமோதய சபைகளும், பிரதேச சபையும் பல மாதங்களாகக் கூட்டப்படாமல் இருந்து வருவதாக அறியப்படுகின்றது.

இதன் காரணமாக சில கிராமங்களில் எவ்விதமான அபிவிருத்திமுயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

நம்பிக்கைச் சொத்துச் சட்டம் 42ம் பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்ப விடயத்தில்.

சுப்பிரமணியம் ஸ்ரீராமலிங்கம்,
இராமலிங்கம் வீதி திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
மனுதார்

இல. ந. சொ/93. எதிர்

1. சுந்தரஐயர் வெங்கடேஸ்வரனும்
2. பெண் சந்தானலட்சுமியும் இருவரும்

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
எதிர்வாதிகள்

திருநெல்வேலி கிழக்கில் அமைந்திருக்கும் ஸ்ரீ வாலை அம்மன் கோவிலுக்குரிய நல்லூர் இறையில் அமைந்திருக்கும் தர்மசாதன ஆதனத்தை விற்பதற்கான அறிவித்தல்.

மேற்படி வழக்கில் திருநெல்வேலி கிழக்கில் அமைந்திருக்கும் ஸ்ரீவாலை அம்மன் கோவிலுக்குரிய நல்லூர் இறையிலிருக்கும் வண்ணான் வளவும் தட்டான் வளவும் நில. பர. 6 குளி 7 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை முழுமையாகவோ பகுதிகளாகவோ பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு மேற்கூறிய மனுதார் இம்மன்றில் ஓர் விண்ணப்பம் செய்துள்ளார் என்றும் மனுவுடன் அணைக்கப்பட்டிருக்கும் விலை மதிப்பாளரின் அறிக்கைக்கு அமைவாக இவ்வாதனம் விற்பனைசெய்யப்படுமென்றும் மேலும் இவ்வழக்கில் அக்கறையுள்ளவர்கள் யாவரும் மன்றுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். 1983ம் ஆண்டு மார்கழி மாதம் 16ந் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளல் வேண்டும்.


1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்,
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

வரைவு:
இ. கமலநாதன்,
மனுதார் சட்டத்தரணி.

1022

## எமது நன்றி



எமது திருமண வைபவத்தில் நேரில் கலந்து கொண்டும் செய்திகள் மூலமும் எம்மை வாழ்த்திய உறவினர்கள், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த

நன்றிகள்

எஸ். எஸ். குஹநாதன்
(உதவி ஆசிரியர், ஈழநாடு)
ஜெட்மேரி ரஜனி

'ஜமுடிநிரு',
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.

(10246)

இரும்புப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன

- இறக்குமதிசெய்யப்பட்ட உருண்டைக் கம்பிகள்
- முறுக்குக்கம்பிகள், கல்வனைஸ்ட் பைப்புகள்
- இணைப்புப் பொருட்கள் (FITTINGS)
- இறக்குமதிசெய்யப்பட்ட அரத்தாள்கள் (SANDPAPERS)
- ஊத்தைச்சோடா (50 Kg.) பைக்கற்றுகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு

கதிர் ஹாட்வெயர்ஸ்
KATHIR HARDWARES
(இல. 11/1, மொம்சாக் கட்டிடம்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 23130
(10247)

வெளிநாடு செல்கிறீர்களா?
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை
எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே
பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்கட்கு:-
TFC
த பினன்ஸ் கம்பனி
லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி
23680
COLOMhoStudio

பிரயாணச் சீட்டுக்களை
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# சனசமூக நிலையங்களுக்கு ரூ. 2,62,000 நன்கொடை!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட 625 சன சமூகங்களுக்கும் உள்ளூராட்சி அமைச்சு 83-ம் ஆண்டுக்கான நன்கொடை நிதியாக 2 லட்சத்து 62 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகங்களுக்கு மேற் குறிப்பிட்ட நன்கொடைப் பணத்தை அனுப்பி வைத்துள்ளார்.

'ஏ', 'பி' பிரிவு என்று இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ள சனசமூக நிலையங்களில் 'ஏ' பிரிவுக்கு 500 ரூபாவும், 'பி' பிரிவுக்கு 300 ரூபாவுமாக நன்கொடைப் பணம் வழங்கப்பட்டு வருவதாகவும், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகங்களுடன் நிலைய நிர்வாக உத்தியோகத்தர்கள் நேரில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் பொதுச்செயலாளர் திரு சி. சி. வரதராசா தெரிவித்துள்ளார்.

(மா-கு)

## அன்னை திரேசாவுக்கு எலிஸபெத் ராணி தங்கப்பதக்கம் வழங்கினார்

புதுடில்லி நவ. 29

அன்னை திரேசாவுக்கு (73 வயது) பிரிட்டனின் இரண்டாவது எலிஸபெத் மகாராணியார் 'ஆர்டர் ஒப் மெரிட்' என்ற பிரிட்டனின் பெருமைமிகு தங்கப் பதக்கத்தை நேற்று வழங்கிக் கௌரவித்தார்.

அன்னை திரேசா மனித குலத்திற்கு ஆற்றிய தொண்டைப் பாராட்டியே அவருக்கு இந்த விருதை எலிஸபெத் மகாராணியார் வழங்கினார்.

இந்த விருதைப் பெறும் பிரிட்டிஷ் அல்லாத 5வது பிரஜை அன்னை திரேசாவாவர்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு 1963ம் ஆண்டு இந்த விருது வழங்கப்பட்டது.

அன்னை திரேசா 1979ல் நோபல் பரிசு பெற்றவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

[வெ]

## இப்படியும் நடக்கிறது

வெளிநாட்டிலிருந்து விமானத்தில் நீங்கள் தாயகம் திரும்புகின்றீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் கைவசமிருக்கும் சிறிய 'சூட்கேஸ்' அல்லது 'பேக்' தவிர ஏனைய பொதிகள் நீங்கள் பிரயாணம்செய்த விமானத்திலிருந்து இறக்கப்பட்டு, வேறு ஒரு ('சுழலும் 'பெல்ட்' ஏணி') வழியாக உங்களிடம் சுங்கப் பரிசோதனைக்காக வந்துவிடுகிறது.

வந்து குவியும் பொதிகளில் உங்களது உடைமையை இனங்கண்டு 'கஸ்டம்ஸ்' முன் ஆஜராகவேண்டியதுதான் அடுத்த கட்டம்.

இந்த இடைவெளிக்குள் உங்களது பொதியின் பாரம் திடீரெனக் குறைந்துவிடுகிறதாம்!

அதாவது, உங்களை அறியாமலே சில பொருட்கள் பொதியிலிருந்து மாயமாகிவிடுகிறதாம்! எப்படி?

பொதியின் ஏதோ ஒரு ஓரப்பகுதி 'பிளேட்' அல்லது கூரிய ஆயுதமொன்றின் கீறல்பட்டு உடைமைகள் மிக வேகத்தில் வெளியே எடுக்கப்படுகிறதாம்!

"ஊடுருவி"

### புதிய அரச ஊழியர்கள்:

## ஒரு மாதத்திற்குள் சத்தியப்பிரமாணம்

(திருகோணமலை)

புதிதாக அரச நியமனம் பெறும் அரசாங்க ஊழியர்கள் நியமனம் பெற்ற திகதியில் இருந்து ஒரு மாதகாலத்தினுள் அரசியலமைப்பின் 6-வது சட்டத்திருத்தத்தை ஏற்று விசுவாசப் பிரமாணம் செய்ய வேண்டும் என்று பணிக்கப்பட்டிருக்கின்றது.

பொதுநிர்வாக அமைச்சுச் செயலாளர் திரு. டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன இது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றை அமைச்சுச் செயலாளர்கள் அரச திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

(ப)

## உதவி விமானிகள் வேலைநிறுத்தம்

(டோக்கியோ)

ஜப்பானைச் சேர்ந்த 3500 உதவி விமானிகளும், உப சாரணையாளர்களும் சம்பள உயர்வு கோரி நேற்று 24 மணித்தியால வேலை நிறுத்தத்திலீடுபட்டனர்.

(வெ)

### யாழ். ஆஸ்பத்திரி

## சிற்றூழியர் நியமனத்தில் பாகுபாடு: 'ஆலால்' தந்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரிக்கு தனிப்பட்ட ஒருவரின் பட்டியலில் இருந்து ஆண்-பெண் சிற்றூழியர் நியமிக்கப்படுவதை ஆட்சேபித்து கோப்பாய் தொகுதி எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் சுகாதார அமைச்சருக்கு தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அத்தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 'யாழ்' ஆஸ்பத்திரிக்கு சிற்றூழியர்களை நியமிப்பதற்கு சுகாதாரப் பகுதி விண்ணப்பம் கோரியிருந்தது. யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் வேலை வங்கி மூலம் சிற்றூழியர்களுக்கான பட்டியல் முன்னர் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. ஆனால் அமைச்சு அதைப் புறக்கணித்து தனிப்பட்ட ஒருவர் அனுப்பிவைத்திருந்த பட்டியலிலிருந்தே சிற்றூழியர்கள் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப்பரீட்சை நடத்துவதற்கு அடுத்த மாதம் 7ம், 8ம், 9ம் திகதிகளில் யாழ். சுகாதார அத்தியட்சகர் காரியாலயத்தில் சமூகமளிக்குமாறு அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. இது விஷயத்தில் நீதி வழங்கவேண்டும்."

இத்தந்தியின் பிரதிகள் யாழ். அரசாங்க அதிபர் யாழ் மாவட்ட சுகாதார வைத்திய அத்தியட்சகர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

[மா]

## விடுதலையாகி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபின் விடுதலை செய்யப்பட்டு விட்டார் எனத் தெரிவித்தார்.

சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், இவர் கூறும் தகவலை தம்மால் ஏற்கமுடியாதுள்ளது என்றும், எப்போது விடுதலையானார் என்ற தகவல்களை இவர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரினார்.

இதையடுத்து நீதிபதி மேற்படி நபர் விடுதலை செய்யப்பட்ட விபரங்களை அடுத்த தவணையில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டு மேல் விசாரணையை ஒத்தி வைத்தார்.

## இருளில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசிக்கொண்டிருந்தபோது அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டது.

"அரச எம். பி. க்களின் குறுக்கீட்டைவிட மின்சாரத்தின் குறுக்கீடு அதிகரித்துள்ளது" என்று எதிர்க்கட்சித்தலைவர் கூறினார்.

[கு]

## டாக்டர்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார அமைச்சர், இதனால் 25 மருத்துவ நிலையங்களும் 25 தற்காலிக மருத்துவ நிலையங்களும் முற்றாக மூடப்பட்டுள்ளன என்றார்.

"ஜூலைக் கலவரங்களால் மருத்துவ பீடப் பரீட்சைகள் நடைபெறாததால் புதிதாக சேவைக்கு வரவிருந்த 450 டாக்டர்கள் மருத்துவக் கல்லூரியிலிருந்து வெளிவரவில்லை இவர்கள் அடுத்த மார்ச் மாதத்திலேயே வெளிவருவார்கள்" என்றும் அமைச்சர் டாக்டர் அத்தபத்து தெரிவித்தார்.

(இ-கு)


## மரண அறிவித்தல்



### வஸ்தியாம்பிள்ளை இராயப்பு

கரவெட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியர் வஸ்தியாம்பிள்ளை இராயப்பு காலமானார்.

இவர் அந்தோனியாப்பிள்ளையின் அன்புக் கணவரும், கனகராசா (உத்தியோக மொழி இலாகா), ஆனந்தராசா (உரிமையாளர் பிறேமா றேடேர்ஸ் நெல்லியடி), ஆனந்தராணி, சபைக்குரிய சகோதரி புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், A. E. ஜெயசிங்கம் (கலால் பரிசோதகர் - மட்டக்களப்பு), நிர்மலா, பிறேமா, வணபிதா மங்களராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், வணபிதா ஜெயகுமாரின் பெரிய தந்தையுமாவர். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக நாளை (1-12-83) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு குடும்ப சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

10268



## மரண அறிவித்தல்

### டாக்டர்

### அ. பொ. தங்கவேலுச் செட்டியார்

நல்லூரைச் சேர்ந்த டாக்டர் தங்கவேலுச் செட்டியார் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரைச் செட்டியார், திருமதி பொன்னுத்துரைச் செட்டியாரின் அன்பு மகனும், யோகாம்பிகையின் அன்புக் கணவரும், வரதலெட்சுமி, வரதராசனின் அன்புத் தந்தையும் ஆவார் அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை (30-11-83) மாலை இரண்டு மணிக்கு 31 A, செட்டித்தெரு, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று செம்மணி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

10263


### பலா, ஈரப்பலா மரங்களை

## வெட்டத் தடை!

[திருகோணமலை]

பலா மரம், ஈரப் பலா மரம் ஆகியனவற்றை வெட்டுவதற்கு நாட்டில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட சில காரணங்களைத் தவிர வேறு காரணங்களுக்காகப் பலாமரம், ஈரப் பலாமரம் ஆகியனவற்றை வெட்ட அனுமதி வழங்கக் கூடாதென்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திரு. டி பி ஐ பி எஸ் சிறிவர்த்தன சகல அரசாங்க அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

பின்வரும் காரணங்களுக்காக மட்டுமே பலாமரம், ஈரப் பலாமரம் ஆகியனவற்றை வெட்ட அனுமதி வழங்கலாம் என்று அரசாங்க அதிபர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய மரங்கள், பயன் தராத வயது போன மரங்கள், தனியார், அரச கட்டிடங்களை நிறுவுவதற்கு முட்டுக்கட்டையாக நிற்கும் மரங்கள்.

ஏனைய வருமானம் தரும் பயிர்களுக்கு நிழலைக் கொடுப்பதன் மூலம் அப் பயிர்களால் கிடைக்கும் வருமானத்தைத் தடைசெய்யும் மரங்கள் ஆகியனவற்றை வெட்டவே அரசாங்க அதிபர்கள் அனுமதி வழங்கலாம்.

பிரதேச உதவி அரசாங்க அதிபரோ அல்லது உயர்மட்ட அதிகாரி ஒருவரோ நேரிற் சென்று வெட்டப்படும் பலா மரத்தை பார்வையிட்டு, அம் மரத்தை வெட்ட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது என்று கணித்த பின்னர் தான் வெட்டுவதற்கு அனுமதி வழங்கவேண்டும்.

## தமிழ் ஊழியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களிடம் புனரமைப்பு வரி அறவிடப்படுகிறது.

"ஒருவர் காணமல்போனால் ஏழு ஆண்டுகள் உயிருடன் இருப்பதாகவே கருதப்படுகிறது. ஜூலை கலவரங்களின் போது பலர் இறந்திருக்கிறார்கள். ஆனால் இவர்களின் இறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறமுடியாதுள்ளது. இப்படி இறந்தவர்களில் 300 பேரின் பட்டியலொன்றை யாழ்ப்பாணத்திலிருந்து எனது நண்பர் ஒருவர் எனக்கு அனுப்பியுள்ளார். இவர்களின் பென்ஷன் போன்ற நிவாரணங்களைப் பெறுவதற்கு மரண சான்றுப் பத்திரங்களைப் பெறமுடியாதுள்ளது. இவர்களுக்கு விசேட ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்" என்றார்.

(இ-கு)

## யாருடையது?

யாழ் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த திரு தி. சுப்பிரமணியம் என்பவர் செல்வி அத்துல் ஜபார் சம்சுநயிமா என்பவரின் அடையாள அட்டையையும், கொக்குவில் திரு. ஆர். பாலேந்திரன் என்பவர் திரு முத்தையா கருணைராஜனின் அடையாள அட்டையையும் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் பெற்றுக் கொள்ளவும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box: 49, Telephone: 22389 — 24126.